மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, வியாபாரிகள் வாங்கினால்கூட, நாம் கொடுக்கின்ற நெல்லுக்கு எவ்வளவு அரிசி தர வேண்டும் என்பதுதான் சர்ச்சைக்கு உரிய பிரச்சினையாக இருக்கிறது. அதில் ஏற்படும் குறையை நாம் நஷ்டம் என்கிறோம். ஆனால் அவர்கள் அதை இழப்பு என்கிறார்கள். இயற்கையாக வியாபாரத்திலே இருப்பவர்கள் எல்லாம் இதை இழப்பு என்கிறார்கள். இந்த ஒரு பாகுபாடு அவர்கள் சொன்ன முறையில் இருக்கத்தான் செய்யும். இதைச் சரிக்கட்ட புதிய யோசனைகள்தான் நாம் கண்டுபிடிக்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : The supplementaries seem to be large in number. இங்கே பண்ணை முதலாளிகள் விவசாயிகள் நிறையபேர் இருக்கிறார்கள். கேளுங்கள்.

திரு. கே. எஸ். கணபதி : Hon. Chairman, Sir, that seems to be the a,or roblem now. தலைவர் அவர்களே, எந்த ஒரு நிர்வாகத்தை எடுத்துக்கொண்டாலும், மொத்த “டர்ன் ஓவரிலே” 15 சதவீதத்துக்கு மேற்படாமல் அந்த நிர்வாகச் செலவு இருக்க வேண்டும் என்பதுதான் ஒரு கொள்கை. அந்த அடிப்படையில் பார்த்தால் கூட, மிக அதிகமான லாபம் இருக்கும். எனவே, உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு அதிகமாக, தற்போது இருப்பதைவிட சற்று அதிக அளவில், கொள்முதல் விலை கிடைப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது நிறைய கடைகள் திறக்கப்பட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஒரு கடையில் 2,000 கார்டுகள் என்று இருக்கும்போது, நிறையபேர் நீண்ட க்யூவில் நிற்கிறார்கள். அரிசியையும், மற்ற உணவுப் பொருட்களையும் மட்டுமே அந்தக் கடையிலே வழங்கும்போது, நமக்கு நஷ்டம்தான் ஏற்படுகிறது. நாம் தற்போது 250 ரூபாய் சம்பளம் கொடுக்கிறோம். அவ்வாறு கொடுத்தும் ஸ்டிரைக் போன்றவைகளை சந்திக்கும் நிலை ஏற்படுகிறது. தற்போதுள்ள நிலையை விட இந்தப் பிரச்சினையை வேறு எந்த முறையிலும் மாற்ற முடியும் என்று நான் கருதவில்லை.

Small Farmers' Co-operative Irrigation Societies.

*142 *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state :—

(*a*) the number of Small Farmers' Co-operative Irrigation Societies registered in East Ramanathapuram District ; and

(*b*) the number of societies which are functioning actually?

1975 மார்ச் 10]

சிறு நில விவசாயிகள் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் பதிவாகியுள்ள சிறு நில விவசாயிகள் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை?

(இ) அவைகளில் எத்தனை நடைமுறையில் இயங்குகின்றன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 176.

(இ) செயற்படுத்தவியலும் எனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சங்கங்கள் 36.

(பிற்பகல் 4-20)

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவரவர்களே, மற்ற சங்கங்கள் என்ன ஆயிற்று என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, சிலவற்றை அங்கே ஆரம்பித்தது தவறு என்று முடிவெடுத்திருக்கின்றார்கள். சிலவற்றிலே கிணறு தோண்டுவதற்கு வாய்ப்பில்லை என்று முடிவு செய்திருக்கின்றார்கள்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : இந்த 30 சங்கங்களில் இப்போது இயங்குகிற, நடைமுறையில் வேலை செய்துகொண்டிருக்கின்ற சங்கங்கள் எத்தனை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இன்று அறிக்கை தயாரித்துள்ள சங்கங்கள் என்று சுமார் 47 இருக்கின்றன. இதிலே எந்தெந்த சங்கங்களுக்கு கடன் வழங்க முடியுமோ அப்படி 20 சங்கங்களுக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

திரு. வி. வெங்கா : தலைவரவர்களே, பாதிக்கு மேற்பட்ட சங்கங்கள் இயங்கவில்லை என்று அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து தெரிய வருகிறது. அதுமாதிரி தமிழகம் பூராவிலும் இருக்கிறது. இப்படி இயங்கமுடியாத சங்கங்களைக் கலைத்துவிடுகிற உத்தேசம் ஏதாவது அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இந்த நீர்ப் பாசன வசதிகளை உருவாக்குகின்ற வசதி வாய்ப்புகள் எல்லாம் எங்கெங்கு இல்லையோ அங்கெல்லாம் இருக்கும் சங்கங்களைக் கலைத்துவிடுகின்ற முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது.